முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1079

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.09.2022, திங்கட்கிழமை

1. சற்குருவாய் வந்த அரங்கனே
சங்கடம் போக்கும் ஞான தேசிகனே
அற்புதத்தை உலகினில் நடத்தி
அகிலத்தையே மாற்ற வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 27 நாள், 12.09.2022 திங்கட்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தார் ஞானம் பயின்று வந்தால்
3. வந்திட இந்த உலகத்தில் மாற்றம்
வல்லமைபட ஞான ஆட்சியாக நடந்தேறக்கூடும்
கூடவே தர்மபாதை கொண்டு
குவலயத்தாரை தர்மவழிக்கு அழைக்கும்
4. சுடரேற்றி அருள்புரியும் அரங்கன் திருவடியே
சுத்த நெறிவழி உலகத்தையே அழியாமையிலிருந்து மீட்கும்
ஆகவே அரங்கன் காட்டும்
அருள் உபதேசமாம் சன்மார்க்க நெறிவழி
5. வரமென உலகோர் தொடர்ந்து இணைந்து வந்து
வையகத்தில் வலுவாக கடைபிடித்து
தெளிவுபெறும் வண்ணம் தொடர்ந்து நித்தம்
தேசிகன் நாமத்தோடு ஞானிகள் பூஜை
6. பூஜைதனை தடைபடா தொடர்ந்து செய்ய
புண்ணியவழிகளாக மாறி ஆசாபாசங்கள் வழி வரக்கூடிய
அனைத்துத் துன்பங்களும் அகன்று
ஐயமற அவரவரும் ஞானிகளாகத் தேறுவர்
7. இந்தவித தேற்றத்தை அரங்கன் மூலமாக
இந்த பேருலகில் ஆறுமுகன் யான் நடத்தி வர
சிந்தை வைத்து அரங்கன் வழி வந்தால் போதும்
சித்திகளும் வெற்றிகளும் உலகோர்க்கு இலகுவாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–